Registered as a News Paper at Sri Lanka    பக்கங்கள் 04    விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம் 02    பெப்ரவரி    (24 02 1991)    ஞாயிற்றுக்கிழமை    ஒசை 06

## விலைப்பட்டியல் தொங்கவிட யாழ்.வர்த்தகசங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரில் உள்ள சகல வர்த்தகர்களும் அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமன்றி சகல விற்பனைப் பொருள்களுக்கும் உடனடியாக விலைப்பட்டியல் தொங்கவிடப்பட வேண்டும். இதனை மீறுவோர்கள்மீது அதிகாரிகளால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமாயின், சங்கம் எவ்வித பொறுப்பும் ஏற்காது என யாழ். வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் படுகொலை; மாணவர்கள் மறியல் போராட்டம்

(மன்னார்)

21.02.91 அன்று காலை தொடக்கம் மாலை வரை 500க்கு மேற்பட்ட முருங்கன் மகா வித்தியாலய மாணவர்கள் வீதி மறியல் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

கடந்த 17.2.91இல் கைதுசெய்யப்பட்ட முருங்கன் மகா வித்தியாலய பொறுப்பதிகாரி அதிபர் திரு அ. செபமாலை, உப அதிபர் திரு பி. குசைலப்பு உட்பட நால்வர் கொல்லப்பட்டதாக அஞ்சப்படுகிறது. இதனைக் கண்டித்து முருங்கன் மகா வித்தியாலய மாணவர்கள் காலவரையறையின்றி வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர். இவர்களுக்கு ஆதரவாக மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை மாணவர்களும் ஒரு வார காலத்திற்கு வகுப்புக்களைப் பகிஷ்கரிப்பதெனத் தீர்மானித்துள்ளனர். சுலோக அட்டைகளைத் தாங்கிய மாணவர்கள் போக்குவரத்தைத் தடை செய்து வீதியால் வந்த பு.ஐ.எச். சி.ஆர் நிறுவன பாதுகாப்பு நிறுவன வாகனங்களை மறித்து மகஜர்களைக் கையளித்துள்ளனர். பெருந்தொகையான பொது மக்களும், பெற்றோரும் ஆதரவுவழங்கிப் போராட்டத்திலீடுபடுகின்றனர் ஆங்கிலத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### துண்டுப் பிரசுரமும் துப்பாக்கிச் சூடும்

(குருநகர்)

துண்டுப் பிரசுரங்களை வீசிய ஹெலிக்கொப்டர் வேட்டுக்களைத் தீர்த்தது.

இச்சம்பவம் நேற்றுக்காலை 11 மணியளவில் யாழ் நகரில் நடைபெற்றது.

யாழ் கோட்டை, குருநகர் பாஷையூர், கொய்யாத்தோட்டம், முத்திரைச் சந்திப் பகுதி ஆகியவற்றின் மேலாக வட்டமிட்ட ஹெலிக்கொப்டரில் இருந்து துண்டு பிரசுரங்கள் வீசப்பட்டதுடன் கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டது. (உ)

### அவசரகாலச் சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கும் சட்டமூலம் நேற்று முன்தினம் சிறிலங்கா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### ஊர்காவற்றுறை: ஒருவர் பலி

சுருவில்பகுதியில் இடம்பெற்ற சன்னிவெடித் தாக்குதலில் ஊர்காவற்றுறை...

கல்வி அமைச்சும், பரீட்சை ஆணையாளரும்

# பரீட்சை நடத்தாவிடில் நடத்த வேண்டி வரும்

- யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சும் பரீட்சை ஆணையாளரும் எமது மாணவர்களுக்குப் பரீட்சை வைக்காவிட்டால் நாமே வினாத்தாள்களைத் தயாரித்து பரீட்சைகளை நடத்த வேண்டியிருக்குமென யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் ஈழநாதத்துக்கு அளித்த பேட்டியில் அண்மையில் கொழும்பிலிடம் பெற்ற மாநாடு ஒன்றுக்கு வடபகுதி கல்வி அதிகாரிகள் அழைக்கப்படவில்லை. குறிப்பாக முல்... அழைக்கப்படவில்லை என்றார்.

மேலும் பரீட்சைகள் பற்றிய தகவல்களில் அவர் தெரிவித்ததாவது: ஆறாம் ஆண்டு புலமைப் பரிசிலும், உயர்தரப் பரீட்சையும் எமது சக்திக்குள் நடாத்துவதுடன் அதில் சித்தி அடையும் மாணவர்களை உயர்தர கல்வி பயில அனுமதிக்கப் போவதாகவும் கூறினார்.

(லோ)

### சர்வோதய கணக்காளர் இராஜினாமா

(யாழ்ப்பாணம்)

சர்வோதய அமைப்பின் சிரேஷ்ட கணக்காளராகப் பதவி வகித்து வந்த வி. சி. அசோகன் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். சர்வோதயத்தில் புனர்வாழ்வு, புனருத்தாரணம், நிவாரண வேலைகளுக்கு இவர் பொறுப்பாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சர்வோதயம் இன்றைய நிலையில் எவரும் தமது கடமைகளைத் திருப்தியாகச் செய்ய முடியாது என்று அசோகன் தெரிவித்தார்.

### கொழும்புப்பயணிகள் மீது ஹெலிசூடு; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு செல்லும் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் வண்டியொன்று நுணாவில் பகுதியில் வைத்து ஹெலியொன்று தாக்குதல் மேற்கொண்டதில் மூன்று பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் நுணாவில் பகுதியில்மேற்கொள்ளப்பட்ட இந்த ஹெலித் தாக்குதலில்

(4ஆம் பக்கம் பார்க்க)

...றுள்ள நிலையில் எவரும் தமது கடமைகளைத் திருப்தியாகச் செய்ய முடியாது என்று அசோகன் தெரிவித்தார்.

## சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கும் சட்டமூலம் நேற்று முன்தினம் சிறிலங்கா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## ஊர்காவற்படை ஒருவர் பலி

தந்திரிமலைப் பகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். பொலநறுவையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் இரு பொலிஸார் காயமுற்றனர். ஜீப்வண்டியும் சேதமாக்கப்பட்டது.

## சோகத்தில் குருநகர்

(குருநகர்)

நேற்று முன்தினம் 22.2.91 கட்டுவனில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த இரு பெண் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## வியாபாரியாக அரச ஊழியர்

வேரதீவு இறங்குதுறையில் அரச ஊழியருக்கு முன்னுரிமை கொடுத்ததும் அவர்களும் வியாபாரத்தில் இறங்கியுள்ளார்கள். இதனால் பொதுமக்கள் இயூவில் அவர்களுக்கு நின்று வருகின்ற நிலைக்கு வரவேண்டியுள்ளது என அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் கூறுகின்றனர். 71.

## இலவச பாட நூல் விநியோகம்

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்குரிய சகல ஆண்டு மாணவர்களுக்குமான, இலவசப் பாடநூல் வழங்கும் நிகழ்ச்சி நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு, இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (11.)

## — யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சும் பரீட்சை ஆணையாளரும் எமது மாணவர்களுக்கும் பரீட்சை வினாத்தாள்களை அனுப்பி வைக்காவிடத்து நாமே வினாத்தாள்களைத் தயாரித்து பரீட்சைகளை நடத்த வேண்டியிருக்குமெனை யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் அண்மையில் கொழும்பிலிடம் பெற்ற மாநாடு ஒன்றுக்கு வடபகுதி கல்வி அதிகாரிகள் அழைக்கப்படவில்லை. குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களின் கல்வி அதிகாரிகள் சமுகம் தரவில்லை. அத்துடன் உயர்தர மற்றும் சாதாரணதர புலமைப் பரிசில் பரீட்சைகள் வைப்பது பற்றிய திகதியும் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றார்.

மேலும் பரீட்சைகள் பற்றிய தகவல்களில் அவர் தெரிவித்ததாவது: ஆறாம் ஆண்டு புலமைப் பரிசிலும், உயர்தரப் பரீட்சையும் எமது சக்திக்குள் அடங்காதவை. ஆனாலும் சாதாரணதர பரீட்சையைக்கூட பரீட்சைத் திணைக்களம் அவசியமில்லாது நடாத்த முடியும். அப்படியானால் அனைத்து சாதாரணதர பரீட்சை மாணவர்களுக்கும் நாமே வினாத்தாள் தயாரித்து பரீட்சைகளை நடாத்துவதுடன் அதில் சித்தியடையும் மாணவர்களை உயர்தர கல்வி பயில அனுமதிக்கப் போவதாகவும் கூறினார். (லோ)

## மாங்குளத்தில் குண்டுவீச்சு; இருவர் காயம், வீடு சேதம்

(கிளிநொச்சி)

மாங்குளம் பகுதியில் நேற்று சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசியதில் இருவர் காயமடைந்தனர். வீடு ஒன்றும் பலத்த சேதமடைந்தது.

மாங்குளம் கொல்லர் புளியங்குளத்திலுள்ள ஆறுமுகம் இவநாதன் (வயது 62) என்பவரும் சில்லாலையைச் சேர்ந்த அவரது மருமகளான ஜெசிந்தா சேவியர் (வயது 45) ஆகியோரே குண்டு வீச்சின்போது காயமடைந்தவர்களாவர். இவர்களது வீடே பலத்த சேதத்திற்குள்ளாகியது. (49)

## முத்தமிழ் விழா ஏற்பாடுகள்; கவனிக்க தனிக் குழுக்கள்.

(யாழ்ப்பாணம்)

மார்ச் மாத இறுதி வாரத்தில் யாழ் நகரில் நடைபெற இருக்கும் முத்தமிழ் விழா ஏற்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் நேற்று நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவினர் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஆக்க இலக்கிய கர்த்தாக்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

முத்தமிழ் விழாவின் ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் ஏற்பாடுகளையும் கவனிக்க தனித்தனி குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

அன்னையர் முன்னணிக்கு

## முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு வினோதமான விடயமாகும்

(கொழும்பு)

• அஷ்ரப்

ஆளும் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்துக்கெதிராக ஒன்றுக்கொன்று எதிராக கடந்த காலங்களில் செயற்பட்டு வந்த பல முன்னணி எதிர்க்கட்சிகள் தற்போது ஒன்று சேர்ந்து விட்டதை வீட்டு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கலாய்த்து வருகின்றனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு பயணிகள் மீது ஹெலி சூடு; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு செல்லும் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி நுணாவில் பகுதியில் வைத்து ஹெலியொன்று தாக்குதல் மேற்கொண்டதில் மூன்று பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் நுணாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஹெலித் தாக்குதலில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுவனில் வெளியேற முயன்ற இராணுவம் - புலிகள் மோதல்

(தெல்லிப்பளை)

கட்டுவன் சிறிலங்கா படை முகாமிலிருந்து தெற்குப்புறமாக மக்கள் குடியிருப்புக்களை நோக்கி வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பலமணி நேரம் உக்கிர மோதல் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து பலத்த இழப்புகளுடன் இராணுவம் முகாம் திரும்பியது.

நேற்று காலை 6.30 மணியளவில் மேற்படி முகாமிலிருந்து மல்லாகம் பகுதியை நோக்கி வெளியேற முற்பட்ட இராணுவத்தினரை தடுத்து புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலின்போது புலிகளால் சுமார் 2000 ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. சுமார் 1 மணி நேரம் நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து இழப்புக்களுடன் இராணுவம் முகாமுக்குத் திரும்பியது.

இதனைத் தொடர்ந்து பலாலி, கட்டுவன், வசாவிளான் முகாம்களிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி தொடர்ச்சியான ஆட்டிலறி ஷெல் தாக்குதல்களும் கிபிர் தாக்குதல்களும் 11 மணிவரை மேற்கொள்ளப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருநகரிலும் குண்டுவீச்சு; ஒரு குடும்பத்தில் நால்வர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள திருநகர், ஜெயந்திநகர் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த குண்டுவீச்சு விமானங்கள் பலத்த தாக்குதல் மேற்கொண்டதில் நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். பதினொரு வீடுகளுக்குமேல் பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை பத்து மணிக்கு திருநகர்ப்பகுதியில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் திருநகரைச்சேர்ந்த நாகலிங்கம் செல்லம்மா (வயது 60) அவரது மகன் திருமதி புஸ்பராஜா யோகேஸ்வரி வயது 30) என்பவரும் அவரது பிள்ளைக

(4ஆம் பக்கம் பார்க்க)

விந்திய செய்தி

## அமெரிக்க நிபந்தனைகளை ஈராக் முற்றாக ஏற்கவில்லை

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நிபந்தனைகளை ஈராக் முழுமையாக ஏற்றுள்ளதாக ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்த அதேவேளை, அமெரிக்காவின் நிபந்தனைகளை முற்றாக ஏற்கவில்லை என வேறு செய்தி ஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன.

நள்ளிரவுச் செய்திகளின்படி அமெரிக்காவின் சில நிபந்தனைகளை மட்டுமே ஈராக் ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இதுவும் இராஜதந்திரிகளின் சொல்லாடல்களாக இருக்கலாம் என அவதானிகள் கருதுகின்றார்கள்.

## சரி விளம்பரம்

**விற்பனையாகிறது**

விக்காக்களும்பங்கசுக்களும் ஓர் அறிமுகம், தாவரவியல் மாணவர்களின் துணைநூல் ஆக்கம்: கலாநிதி சிவபாலன் Ph.D., B.Sc விலை ரூபா 50/- சொற்ப பிரதிகள் மட்டுமே உள்ளன. விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (B-2027)



## குருகுலம்

### ஆண்டு விழாவும் கொடி தினமும்

ஆண்டு விழா 24-02-91 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். கொடி தினம் 24-02-91 தொடக்கம் 26-02-91 வரை கொண்டாடப்படும். நாள்விழும் பிகள் சமூகமளிக்கும்படியும் ஒத்துழைக்கும் படியும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்
கனகரத்தினம் சைவ வித்தியா
விருத்திச்சங்கம்.
கிளிநொச்சி.

(B-2060)


## இனி ஒரு நிலை

வீதியும் சூழலும்
இருளுள் புதைந்திருந்தன;
வேசையில்,
இளமுகளில் தேநீர்; அரிக்கன்லாம்பு
ஒளிர்ந்தபடி இருக்கையில்
அதன்கச் சூழவுமிருந்து விவாதித்தோம்;

அம்மிகள் இருக்கவில்லை
களஞ்சியம் தீர்ந்து போகிறது
இடை வீச்சில்
அகதிமுகாமும் தாக்கப்பட்டுள்ளது
துறைமுகத்தில்,
இராணுவ முகாமை விரைவில் அகற்றவேண்டும்;

எனது நகரம் அழிக்கப்படினும்
எனது உணவு தடுக்கப்படினும்
சோராதுழைப்பேன்
இரண்டு ஆண்டு பனாட்டு போதும்
வெடிமணம் அடங்கா நிலத்தில்
உழுத்து பூக்கிறது
முன்று வாரப்பயிரில் காக்கள்
காற்றில் சாய்ந்து நிமிர
அதிகாலைப்பனியில், மேனி சிலிர்க்கையில்
இன்னும் எனது நம்பிக்கை பெருகும்.

இன்றுமென் திரும்பிய துப்பாக்கி தோளிலும்
'கற்பனாதத்'தின் 'இடதாங் வீரர்களு'டனும்
நடக்கின்றேன்;

தொ, நீளவும் ஒன்றிரண்டு
சைக்கிள்கள் போக
தெருவில் இராணுவ முகாமிலிருந்து
இடையிடை சத்தங்கள் காற்றில் ஏறிவர
எனது தேமுகின் சுமையைப் பாடிடவும்
கருவலம் பற்றுறகளினூடு நடக்கின்றேன்.

எஸ். கருணாகரன்

(மூன்றாவது ஆண்டு பூர்த்தியையொட்டி நடாத்தப்பட்ட கவிதைப்போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றகவிதை)

## காங்கிரஸ் பிரமுகர் சுட்டுக்கொலை

(டிஸ்பூர்)

அசாம் பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சிப் பொதுச்செயலாளர் மன்வேந்திர சர்மா சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை அவர் சந்தையில் இருந்து திரும்பி வரும்போது மோட்டார்சைக்கிளில் வந்துகொண்டிருந்தவர்கள் மிக அருகில் வந்து இவரைச் சுட்டதாக அசாம் மாநில பொலிசார் தெரிவித்தனர்.

## பெற்றுக் கொள்ளவும்

(நமது நிருபர்)

வேலகபுரத்தைச் சேர்ந்த சந்தையா மனோன்மணி என்பவருடைய அடையாள அட்டையுடன் கைப்பை ஒன்று சி. ரகுராஜா என்பவரால் ஒழுங்கையில் வைத்து கண்டெடுக்கப்பட்டு எழுந்தம்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## அநாதரவான நிலையில் துவிச்சக்கரவண்டி

சங்குப்பிட்டி இறங்குதுறையில் அநாதரவான நிலையில் துவிச்சக்கரவண்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டு பூநகரிப்பகுதி நிதிப்பிரிவினர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் காட்டிப் பெறவும்.

## கடலில் மிதந்த சிசுவின் சடலம்

(பூநகரி)

பூநகரி கௌதாரிமுனைக் கடலில் சிசுவின் சடலம் மிதந்தது இச்சடலத்தை பொது மக்கள் கண்டு அப்புறப்...

## ஆசிரியர்கள் படுகொலைக்கு ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அம்பாறையில் கடமைக்குச் சென்ற அதிபர், ஆசிரியர்கள் இராணுவத்தால் கொல்லப்படும் பலர் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சம்பவத்தையும், கிளிநொச்சியில் பாடசாலைகளில் குண்டு வீசி மாணவர்கள் பலரை படுகாயம் அடையப் பண்ணியமையையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வன்மையாகக் கண்டித்துள்ளதோடு இவ்விடயத்தை ஜனாதிபதி, கல்வி அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார் இது தொடர்பாக அனுப்பிய தந்தியில் தடுத்து வைக்கப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாது பார்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

## ஐலண்ட், திவயின இதழ்கள் மீது அமைச்சர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

திவயின, ஐலண்ட் ஆகிய தென்பகுதிப் பத்திரிகைகள் மக்கள் வங்கியிடம் இருந்து முப்பது கோடி ரூபாவை கடனாக முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல்லின் அனுசரணையுடன் பெற்றுக் கொண்டுள்ளன இந்த பணத்தை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற கூட்டத்தின் பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் விஜெரட்னா தெரிவித்தார்.

இதே கூட்டத்தில் தொழில் தொழிற் பயிற்சி அமைச்சர் ஜி எம் பிரேமச்சந்திர இவ்விரு பத்திரிகைகளின் வரலாறும் தமக்குத் தெரியும் என்றும் முப்பது கோடி ரூபா கடன் பெற்றுவிட்டு பத்துக் கோடி ரூபாவை மட்டும் திருப்பிச்செலுத்தி கணக்கை முடித்ததும் தமக்குத் தெரியும் என்றும் கூறினார்.

இன்றையதினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அடிதடி சம்பவத்தை இட்டு ஐலண்ட் திவயின ஆகியன வெளியிட்ட செய்திகள் பற்றி நடந்த விவாதத்திலேயே மேற்படி அமைச்சர்களால் இக்குற்றச்சாட்டு வெளியிடப்பட்டது.

## வானொலி நிலையத்தை இராணுவம் கைப்பற்றியது

(பாங்கொக்)

தாய்லாந்து இராணுவத்தினர் அரசிற்கெதிரான சதிப்புரட்சியின் முதல் நடவடிக்கையாக நேற்று தாய்லாந்து வானொலி நிலையத்தைக் கைப்பற்றியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 20 படைவீரர்கள் கவசவாகனம் ஒன்றுடன் வானொலி கட்டடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டதாகத் தெரிகின்றது.


# வளமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி

# "ஷப்றா"

**உங்கள் நிதி வளத்தைப் பெருக்க**

**எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்**

நிலையான வைப்பு

## வளமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி

# "ஷப்றா"

**உங்கள் நிதி வளத்தைப் பெருக்க எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்**

நிலையான வைப்பு

| காலம் - மாதம் | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | — | 17% |
| 06 | — | 18% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதி நிலை விபரம்

| | 1986 87 (ரூபா) | 1987/88 (ரூபா) | 1988/89 (ரூபா) |
|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11,342,354 | 14 354,927 | 23,306,910 |
| பொதுமக்கள் வைப்புகள் | 100,577,492 | 110 897,760 | 116 890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16,813,250 | 14,832,400 | 13,700,000 |
| வங்கி மீதிகள் | 10,911, 12 | 3,189,084 | 1,894,245 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்த முன் இலாபம் | 19'310,887 | 23 173,830 | 23,700,689 |
| வைப்பாளருக்குச் செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3 148 350 | 2 867 656 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

எஸ். பி. ஜ. [illegible]
சட்டத்தரணி, சமாதான நீதவான் (தலைவர்)
எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
ஜே. [illegible],
A. I. B (Lond.), பொதுமுகாமையாளர்
ஏ. எம். எம். பசீர்,
B. A. (Hons)
திரு. பாலசுப்பிரமணியம்;

1988ஆம் ஆண்டு 78ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.
பதிவு இல. NBS / R/90/021

மேலதிக விபரங்களைப் பெற

**ஷப்றா**

**யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,**

61, நியூ புள்ளர்ஸ் வீதி, கொழும்பு - 4

2/7, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(B-2055)


துவிச்சக்கர வண்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டு பூநகரிப்பகுதி நிதிப்பிரிவினர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் காட்டிப் பெறவும்.

## கடலில் மிதந்த சிசுவின் சடலம்

(பூநகரி)

பூநகரி கௌதாரிமுனைக் கடலில் சிசுவின் சடலம் மிதந்த இச்சடலத்தை பொது மக்கள் கண்டு அப்பகுதி கிராமசேவையாளரிடம் அறிவித்தபின்னர் அடக்கம் செய்யப்பட்டது. பெண்குழந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் சென்ற வாரம் நடைபெற்றது.

## கிணற்றில் பாய்ந்து தற்கொலை

(நவாலி)

தனது உயிரை மாய்த்துக் கொள்ளத் திட்டமிட்டவர் மனைவியையும், மகளையும் வேலைக்குச் செல்ல அனுப்பிவிட்டு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நவாலியில் நடைபெற்றது.

வீட்டுக்கு மீண்ட மனைவியும், மகளும் காலமானவரைத் தேடியும் கிடைக்கவில்லை. 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை கிணற்றில் தண்ணீர் எடுக்கையில் சடலம் மிதக்கக்கண்டு மீட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவர் நவாலி தெற்கைச் சேர்ந்த மாரிமுத்து சிவபாலன் (வயது 52) என தெரிவிக்கப்பட்டது. (21)

## ஜனதா தள எம். எல். ஏக்கள் கட்சி மாறினர்

(டில்லி)

அருணாசலப் பிரதேசத்தில் ஜனதா தள கட்சியின் பதினொரு சட்டப்பேரவை உறுப்பினர்களில் ஏழுபேர் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ளார்கள்.

கடந்த வியாழன் அருணாசலப் பிரதேச முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார். இந்த மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியே அரசாங்கம் அமைத்திருக்கிறது.

ரட்னா தெரிவித்தார்.

இதே கூட்டத்தில் தொழில் தொழிற் பயிற்சி அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திர இவ்வருட பத்திரிகைகளின் வரலாறும் தமக்குத் தெரியும் என்றும் முப்பது கோடி ரூபா கடன் பெற்றுவிட்டு பத்துக் கோடி ரூபாவை மட்டும் திருப்பிச்செலுத்தி கணக்கை முடித்ததும் தமக்குத் தெரியும் என்றும் கூறினார்.

சதியாளர்களின் முதல் நடவடிக்கையாக நேற்று தாய்லாந்து வானொலி நிலையத்தைக் கைப்பற்றியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 20 படைவீரர்கள் கவசவாகனம் ஒன்றுடன் வானொலி கட்டடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டதாகத் தெரிகின்றது.




## நினைவு தருகின்றோம்

**பெப்ரவரி 24**

1988 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**முரளி** (ஐ. ஜெயகுமார் - மாதகல்)
அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

ஆண்ட பரம்பரை நாமேதான்
அடிமைகள் ஆகில் முறையாமோ
நீண்ட வரலாறெமக்குண்டு
நிச்சயம் வெற்றி எமக்குண்டு
வேண்டும் எங்கள் தமிழீழம்
வீணர் கையிலே விடமாட்டோம்
பூண்டே விட்டோம் மனஉறுதி
பகைவர் செயலோ பொடியாகும்

விடையே பெற்று வேங்கைகளாய்
விரைந்தே களமே செல்கின்றோம்
தடைகள் எல்லாம் உடைத்தெறிந்து
சரித்திரம் படைப்போம் சத்தியமே
கடையில் விற்கும் சரக்கல்ல
காண்போம் சுதந்திரம் போராடி
கடைசிப் பலியே இருக்கும் வரை
கண்டே தீர்வோம் தமிழீழம்

உறக்கம் எமக்கு இனியேது
உரிமை பெற்றே வாழும்வரை
சிறக்கும் நாளை தமிழீழம்
பேணிக் காப்போம் உயிராக

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2059)

### சிந்தனைக்கு

அண்டை வீட்டுக்காரனின் வேலி பற்றி எரியும் போது, அது உன் வீட்டு வேலையாகி விடுகின்றது.

— ஹோரஸ்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 24-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023 - 2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண். 03

# தேர்தலால் ஆட்சி மாற்றம் சிறிமாவோ பகற்கனவு

"உண்மையான ஜனநாயகத்தை" நிலைநாட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும். ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வாதிகார நிர்வாகத்தை முறியடிக்கவேண்டும் பொதுமக்கள் கிழே பாராளுமன்றத் தேர்தல் ஒன்றைச் சந்திக்கத் தயாராக வேண்டுமே எனவும் நேற்றுமுன்தினம் செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசிய சிறிமாவோ தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா "உண்மையான ஜனநாயகம்" என்று எதைக் கூறுகின்றாரோ தெரியாது ஆனால் ஐக்கிய தேசியக்கட்சியினதும், பிரேமதாசாவினதும் சர்வாதிகார ஆட்சிமுறை நீக்கப்பட்டு தன்னைத் தலைமையாகக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சி கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறுவது மட்டும் விளங்குகிறது. அதனைப் பாராளுமன்றத் தேர்தல் மூலம் கொண்டு வரலாம் எனவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் கருதுகிறார் என்பதும் விளங்குகிறது.

ஆனால், பாராளுமன்றத் தேர்தல் மூலம் இனி சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் ஒன்று நிகழ்வது என்பது காலம்கடந்துவிட்ட ஒரு நிகழ்வாகவே கொள்ளவேண்டும்.

# 43 வருடத்தில் அடி தடிவரை வளர்ந்த சிறிலங்கா பாராளுமன்றம்

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரத்தில் நடைபெறும் விடயங்கள் தமிழ் மக்களைப் பெருத்த அதிக கவனத்தை ஈர்த்து விடுவதில்லை அங்கு நடக்கும் சம்பவங்களும், இயற்றப்படும் சட்டங்களும் தமிழ் மக்களை மேலும் அடிமைப்படுத்தவே பயன்படும் என்ற எண்ணம் கடந்த 43 ஆண்டுகளின் சோதனை. ஆனால் நேற்று முன்தினம் இடம் பெற்ற அடிதடிச் சண்டை இதற்கு முன் நிகழ்ந்திராத ஒன்று. பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி வரிசையில் இருப்போர் எதிரிகள் என்ற நிலையில் நடத்தப்பட்டுள்ளனர். சட்டைகள் கிழிக்கப்பட்டன. கோப்புகள் பறந்தன. கண்ணியம் பேண வேண்டிய சபையில் கைகலப்பு இடம் பெற்றது. இந்த நிலைக்கு யார் காரணம்? அல்லது எந்த விடயம் காரணம்? என்ற ஆராய்ச்சி இச் சமயம் எமக்கு அநாவசியம் எனலாம். இருந்தும் இலங்கைத்தீவின் நாற்பத்து மூன்று வருடகால ஜனநாயக ஆட்சி தமிழ் மக்களுக்கு தந்த பரிசுகளை சிறிதாகப் பார்க்க இந்தச் சந்தர்ப்பம் பயன்படலாம்.

## 1948 இலேயே ஆரம்பம்

ஆங்கில ஆதிக்கம் அகன்று விட்ட சில மாதங்களிலேயே அதாவது 1948 நவம்பர் 15இல் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட 'இலங்கை குடி...

இவர்களை நசுக்க காடைவர்க்கங்களையும், குண்டர்களையும் பயன்படுத்தியது. இதனால் பாராளுமன்றத்திற்கு உட்பட்ட வகையில் மட்டும் ஆட்சியை நகர்த்திச் செல்ல இயலவில்லை எனவேதான் அவசரகால விதிகளின் துணை நாடப்பட்டது 1971 இல் ஆரம்பித்த இந்த நிலை இடையிடையே சிறிதுகாலம் தளர்த்தப்பட்டபோதும் இன்றுவரை நீடித்துச் செல்கிறது;

## பாராளுமன்றத்திற்கு குழி தோண்டிய ஜெயவர்த்தனா

போர் என்றால் போர் என்ற கோஷத்துடன் பதவியேற்ற ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலம் பாராளுமன்ற ஜனநாயகத்தையே படுகுழிக்குள் தள்ளியது. சட்டவாக்கும் அதி உயர் சபையான பாராளுமன்றம் இரண்டாம் இடத்தில் நிறுத்தப்பட்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி அறிமுகம் செய்யப்பட்டது. 1978 யூலை 25ல் புலிப்படைத் தடைச்சட்டம் என்ற பெயரில் ஆயுதப்படையினருக்கு விசேட அதிகாரங்கள் வழங்கும் சட்

இளையவன்

டம் தற்காலிக ஏற்பாடு என்ற போர்வைக்குள் கொண்டுவரப்பட்டது 1979 இல் இ...

...தப்பெற்ற ஒப்பம் கோடலின் (Referendum) மூலம் ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்ற பழைய பாராளுமன்றமே நீடிக்கப்பட்டது. இந்த வகையான செயற்பாடுகளால் சிங்கள மக்கள் மத்தியில் இனவெழுந்த கொந்தளிப்புக்கள் 83 யூலையில் தமிழருக்கு எதிரான இனக்கலவரமாகத் திசை திருப்பப்பட்டது. அத்துடன் தமிழ் மக்களின் ஜனநாயக அபிலாசைகளை அடியோடு அழித்தொழிக்கக் கணம் கட்டிய 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பிற்கான ஆறாவது திருத்தச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் பயனாக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றப் படிக்கட்டுகளை மிதிப்பதற்கு தடை ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறாக எவ்வப்போது காயப்படுத்தப்பட்ட இலங்கையின் ஜனநாயகம், கடந்த இருபதாம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவத்துடன் பலியாகிவிட்டது என்றே கூறலாம். நிலச் சீர்திருத்தச்சட்ட மூலம் ஒன்றின் விவாதத்துக் கொண்டிருந்த பாராளுமன்றம் திடீரெனக் குத்துச்சண்டை மைதானம் போலாயிற்று உறுப்பினர்கள் அடிதடியில் இறங்கினர். சட்டைகள் கிழிக்கப்பட்டன; கோப்புகள் பறந்தன. கோஷங்கள் எழுப்பப்பட்டன. அதாவது சுருங்கச் சொன்னால் உறுப்பினர்...

ஆனால், பாராளுமன்றத் தேர்தல் மூலம் இனி சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் ஒன்று நிகழ்வது என்பது காலம்கடந்துவிட்ட ஒரு நிகழ்வாகவே கொள்ளவேண்டும். சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக்காலத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர ஏனைய கட்சிகள் எவையும் ஆட்சியைக் கைப்பற்றமுடியாத அளவிற்கு தேர்தல் அமைப்புமுறை மாற்றப்பட்டுவிட்டது. அதாவது தேர்தல் முறை, அங்கத்தவர்கள் தெரிவு முறை என்பன மாற்றப்பட்டுவிட்டன. இதனைக் கடந்த தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உணராதிருந்தால் அது அவர்கள் தவறு.

மேலும், கடந்த தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவர் பிரேமதாசாவும் எவ்வாறு தேர்தலில் மோசடி மூலம் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியீட்ட வைப்பது என்பதையும் தெளிவாகக் காட்டியுள்ளார்கள். தமக்கு சாதகமான பகுதிகளில் தேர்தலை நடத்துவதும், ஏனைய இடங்களில் தேர்தலைக் குழப்பியமைத்தலும், தங்கள் வெற்றிக்குத் தேவையான வாக்குகளின் அளவிற்கேற்ப வாக்களிப்பை நடத்துவதும் தேவைக்கேற்ற அளவில் வாக்கு மோசடி செய்வதும் போன்ற விடயங்களில் இன்று ஐக்கிய தேசியக் கட்சி அரச இயந்திரத்தைச் சரியாகப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டுவிட்டது. அதாவது முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோசும், பாகிஸ்தான் ஜனாதிபதி சியாவுல்ஹக்கும் தேர்தல் முறையை எவ்வாறு தமக்குச் சாதகமாக வகுத்துக்கொண்டார்களோ அதேபோன்று சிறிலங்காவின் தற்போதைய ஆட்சியாளர்களும் தேர்தல் மோசடியில் கைதேர்ந்தவர்களாக மாறிவிட்டார்கள். மார்க்கோஸ் பதவியில் இருந்து மக்களால் விரட்டப்படும் வரை மக்களின் வாக்குகளில் 90 வீதத்திற்கு மேல் பெற்றுவந்ததாக அவரது தேர்தல்முடிவுகள் தெரிவித்தன.

மேலும், இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமக்குத் தேவையான மறைமுக வேலைகளைக் கவனிக்க சட்டவிரோத ஆயுதக்குழுக்களையும் தோற்றுவித்துள்ளது. இச் சட்டவிரோத குழுக்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளருக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை-ஜனநாயக ரீதியான நடவடிக்கையாக இருப்பினும் படுகொலை செய்து வருகின்றது. இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை தேர்தல் மூலம் பதவியில் இருந்து இறக்குவது என்பது பகற்கனவாகவே முடியும்.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நாட்டில் தொடர்ச்சியாக பதட்டநிலை இருப்பதையே விரும்புகின்றது இதன்மூலம் தனது ஆட்சி அதிகாரத்தை நீடிக்கலாம் எனவும் நம்புகின்றது. இதன் வெளிப்பாடாகவே விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அழைப்பையும், பேச்சுவார்த்தைக்கான அழைப்பையும் நிராகரித்தது.

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான தலைமையை சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியினால் கொடுக்க முடியுமா என்பது சந்தேகமே. இதற்குப் புதிய தலைமை வேண்டும். மக்கள் எழுச்சியும் வேண்டும்.

பிலிப்பைன்சிலோ, ஈரானிலோ முறையே மார்க்கோசிற்கும், ஷாவிற்கும் எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து நாட்டைவிட்டு விரட்டியது போன்றதொரு நிலையை உருவாக்கி அதற்குத் தலைமை கொடுக்கக்கூடியவர் வெளிவந்தாலேயே இனிமேல் ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்த முடியும் அதுவரை ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வாதிகாரம் தொடர்வது தவிர்க்கமுடியாததுதான்.

அதாவது 1948 நவம்பர் 15இல் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட 'இலங்கை குடியுரிமைச் சட்டம்' 'இந்திய-பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம்' போன்றவற்றினால் சுமார் பத்து இலட்சம் மக்கள் அரசியல் அனாதைகளாக்கப்பட்டனர். நாடற்றவர்களாக்கப்பட்டனர். மக்களின் நலன்கள் என்பவை அரசியல்வாதிகளின் தனிப்பட்ட விருப்பு-வெறுப்புகளால் தீர்மானிக்கப்பட்டன. இதனால் ஏழு பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை தமிழ் மக்கள் இழக்க நேர்ந்ததோடு, சிங்கள மக்களின் சனத்தொகைக்கு அதிகமான பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் கிட்டியது. இந்தச் சட்டங்களினால் பாதிக்கப்பட்டவர் தமிழர்களே என்பதால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மனச்சாட்சியை அடைவு வைத்தனர்.

அடுத்து சிங்கள மொழிச் சட்டமும், கல்வித் தரப்படுத்தல் திட்டமும் இதே பாராளுமன்ற ஆட்சியின் வாயிலாகவே தமிழ் மக்களின் தலையில் திணிக்கப்பட்டது. சுமார் இருபத்து இரண்டு வருட பாராளுமன்ற ஆட்சி முறையினால் இந்த அனுபவம் பாராளுமன்றத்திற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட இளைஞர்களைத் தூண்டியது. இதன் விளைவாகவே 1971 ஏப்ரல் 5 கிளர்ச்சி தென்னிலங்கைப் பகுதிகளில் வெடிக்க அரசுக்கு எதிரான மக்களின் உணர்ச்சி தமிழ்ப் பகுதிகளிலும் தாராளமாக வெளிப்பட்டது. ஆரம்பத்தில் பஸ் வண்டிகளுக்கு தீயிடல் தேசியக் கொடிகளை எரித்தல், என்பதில் தொடங்கி -சிங்கள எழுத்துகளுக்கு தார் பூசுதல்- சுவர்களில் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுதுதல் அமைச்சர்களின் வருகையை புறக்கணித்தல், கறுப்புக் கொடி காட்டுதல் என விரிந்து பல்வேறு சம்பவங்கள் இடம் பெற்று வந்தன. இத்தகைய ஆரம்பகால எதிர்ப்புணர்வுகளின் அத்திவாரங்களைக் கண்டு பிடித்துத் தீர்வு காண சிறிலங்கா அரசு முனையவில்லை. மாறாக இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுவோர்களை கிரிமினல் வழக்குகள் போட்டு நடாத்தியது.

டம் தற்காலிக ஏற்பாடு என்ற போர்வைக்குள் கொண்டுவரப்பட்டது 1979ல் இந்தச் சட்டம் பயங்கரவாத தடைச் சட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அடிப்படை மனித உரிமைகளை நசுக்கும் வகையில் படையினருக்கு அதிகாரம் வழங்கும் வகையில் அமுலுக்கு விடப்பட்டது. இதன்படி படையினர் சந்தேகிக்கும் எவரையும் எவ்வித விசாரணையுமின்றி பதினெட்டு மாதங்கள் வரை தடுத்து வைக்கவும் எந்த மரண விசாரணையுமின்றி சடலங்கள் அகற்றப்படவும் வழி ஏற்படுத்தப்பட்டது. படையினர் புரியும் கொலைகள், சட்டம், ஒழுங்குகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையென அரசியல் வாதிகள் வியாக்கியானம் செய்தனர். அப்போதெல்லாம் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மீதும், தமிழ் இளைஞர்கள் மீதும் குறிவைத்து தொடுக்கப்பட்டதால் தென்னிலங்கை அரசியல் வாதிகளும் ஆமோதித்தனர்.

1980-ல் பாராளுமன்றத்திலேயே எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக ஆளும் கட்சியினர் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வந்து ஜனநாயக மரபுகளை அவமானம் செய்தனர் எங்கும் இல்லாத வகையில் 1981 ஜூன் மாதத்தில் மிகவும் முறைகேடான வகையில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. குடியேற்றங்களைத் தடுக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் வழிசமைக்கும் எனக் கருதிக்கொண்ட கூட்டணியினர் பதவி நாற்காலிகளில் ஒட்டிக்கொண்டதால், இந்த ஜனநாயக மீறல்களை நியாயப்படுத்தி நீதிமன்றத்தில் சத்தியக் கடதாசி தாக்கல் செய்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியான சிறிமாவோவின் குடியுரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் ஜெயவர்த்தனா தமது பதவியைத் தக்க வைத்துக் கொண்டார். ஆனால் ஜனநாயக மரபுகளைக் கேலிக்குள்ளாக்கும் விதத்தில் நடத்

கோப்புக்கள் பறந்தன. கோஷங்கள் எழுப்பப்பட்டன. அதாவது சுருங்கச் சொன்னால் உறுப்பினர்கள் நிதானமிழந்து - உணர்ச்சிவசப்பட்டு மோதிக் கொண்டனர்.

சுமார் நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் - அரச படையினராலும், அதற்குத் துணையானவர்களாலும் கைது செய்யப்பட்டவர்கள் - அவர்களைப் பற்றிய தகவல்களையாவது தாருங்கள் எனத் தாய்மார்கள் கண்ணீர் காய்வதற்கு இடையில் பாராளுமன்றத்தில் இச்சம்பவம் நடந்திருக்கிறது. வகைதொகையாப் பேரில் ஈடுபடும் அமைச்சு அணியினருக்கு என்ன வாக்கு இலங்கை ஆக சம்மதம் தெரிவித்துள்ள வேளையிது. தமிழர் தாயகப் பகுதிகளில் தமது நிலையை இழந்து வரும் சிறிலங்கா சமாளிக்க முடியாமல் திண்டாடும் காலமிது. ஆக இலங்கைத் தீவின் இன்றைய சூழ்நிலையை சமாளிக்கவோ - அல்லது அடக்கிச் செலுத்திக் கட்டுப்படுத்தவோ இயலாத நிலையிலுள்ள ஆளும் கட்சியினரின் கையாலாகாத் தனத்தின் வெளிப்பாடே பாராளுமன்றத்தில் இடம்பெற்ற காடைத்தனம் ஆகும்.

இதிலிருந்தாவது தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக - ஜனநாயக வழியில் அரசியல் பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப்போவதாக - இன்னும் இதுபோலப் பலவாறாக சொல்லிக் கொண்டு கொழும்பில் காலம் கழிப்பவர்கள் பாடம் பயின்று கொள்வது அவர்களுக்கும் நல்லது. தமிழருக்கும் நன்மை தரவல்லது.

## ஆண்டு விழாவும் கொடிதினமும்

(கிளிநொச்சி)

குருகுல ஆண்டு விழாவும், கொடிதினமும் இன்று ஞாயிற்றுக்கிழமை (24-8-91) கிளிநொச்சி குருகுல வெளியரங்கில் பி.ப. 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் கா. சிவத்தம்பியும், கௌரவ விருந்தினராக திரு. கே. கந்தசாமியும் உப-தலைவர் கா. நவலிங்கமும் கலந்து கொள்கின்றனர்.

# அமெரிக்க நிபந்தனைகளை ஏற்பதாக ஈராக் அறிவிப்பு

(வாஷிங்டன்)

பனை வலல் தொடர்பாக அமெரிக்கா முன்வைத்த நிபந்தனைகளை ஈராக் ஏற்றுள்ளது. ஐ.நா. வுக்கான சோவியத் தூதுவர் யூலி வொரொன்ஸ்சொவ் ஈராக்கின் இந்த முடிவு பற்றி பாதுகாப்புச் சபைக்கு பாச்தாத தெரிவித்துள்ளது. நேற்று வளைகுடா தொடர்பான பிரச்சினைகளை ஆராயப் பாதுகாப்புச் சபை இரகசியமாகக் கூடிய போதே இத்தகவல் சோவியத் தூதரால் தெரிவிக்கப்பட்டது. இத்தகவலைப் பிரான்ஸ் நாட்டுச் செய்தி ஸ்தாபனமான ஏ.எவ்.பி. வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா விதித்துள்ள நிபந்தனைகள் வருமாறு:

குவைத்திலிருந்து நேற்று நண்பகலளவில் படைகளை வெளியேற்ற ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது முதலாவது நிபந்தனையாகும். இரண்டாவது நிபந்தனை ஒரு வாரத்திற்குள் படைவிலகல் முற்றுப்பெற வேண்டும் என்பதும். நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் குவைத் தலைநகரில் இருந்து முற்றாக ஈராக் படைகள் வெளியேற வேண்டும் என்பதும் ஆகும். அடுத்து குவைத்தின் சட்டபூர்வமான அரசாங்கம் மீண்டும் பதவியேற்க அனுமதிக்க வேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மேலும் குவைத் சவூதி அரேபியா எல்லையிலுள்ள படைகளை ஈராக் விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கா நிபந்தனை விதித்திருந்தது.

சோவியத் மாற்றியமைக்கப்பட்ட

## சமாதானத் திட்டத்தையும் ஈராக் ஏற்றுக்கொண்டது

(மொஸ்கோ)

ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸ் மாஸ்கோவில் பேசுகையில் தமது அரசு மாற்றியமைக்கப்பட்ட சோவியத்தின் புதிய அமைதித் திட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் எனத் தெரிவித்துள்ளார். போர் ஓய்வு ஏற்பட்ட இருபத்தியொரு நாட்களினுள் நிபந்தனையேதுமின்றி குவைத்தை விட்டு வெளியேறுதல் அத்திட்டத்தின் முக்கியமானதாகும். சோவியத்தின் திட்டத்தை ஈராக்கின் புரட்சிகரக் கவுன்சில் முற்றாக ஆதரிப்பதாக மாஸ்கோவை விட்டுப் புறப்படுமுன் தாரிக் அஸீஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

## போரின் பின் வளைகுடாவில் சமநிலையற்ற நிலைமை

(மலேசியா)

வளைகுடா யுத்தம் முடிவுற்றபின்னால் மத்திய கிழக்காசியாவில் சமநிலையற்ற தன்மை தோன்றும் என மலேசியா எச்சரித்துள்ளது. மலேசியப் பிரதமர் மகதீர் முகம்மட் செய்தியாளரிடம் கூறுகையில் மேற்காசியாவில் உள்ள முஸ்லிம் நாடுகள் பொருளாதார, இராணுவ வலிமை குறைந்துவிடுவதால் இஸ்ரேல் ஒரு வல்லரசாக உருவெடுக்கும். அத்துடன் இருப்பதாகக் கருத்து வெளியிட்டார். இந்த பிராந்திய நாடுகளின் கட்டுப்பாடு வெளிநாடுகளிடம் இருக்கும்.

-மலேசியப் பிரதமர்

பெற்றோலிய நாடுகள் கட்டுப்பட்டு தளர்ந்து விடும். வளைகுடா நெருக்கடித் தீர்வுக்கு சோவியத் முன்வைத்துள்ள யோசனைகளை மலேசியா வரவேற்றுள்ளது.

## தாய்லாந்தில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது

(பாங்கொக்)

தாய்லாந்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அந்நாட்டு அமைச்சரவை தூக்கி எறியப்பட்டது ...

அதிகாரத்தைக் கைப்பற்றியிருப்பதாக அந்நாட்டின் வானொலி அறிவித்துள்ளது. ராய்ட்டர் நியூஸ் ஏஜன்சி ...

## துரைசிங்கத்திற்கு சாகித்திய பரிசு

1989 ஆம் ஆண்டிற்குரிய சிறுவர் இலக்கியத்திற்கான, தேசியத் தமிழ் சாகித்திய மண்டலப் பரிசு, யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அதிகாரி, குழந்தைக் கவிஞர், த. துரைசிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# 38 ஆம் நாள் வளைகுடாப் போர்

★ கிழக்கு சவூதி அரேபிய தளம் ஒன்றிலிருந்து பயங்கர நேபாம் குண்டுகளை அமெரிக்க ஜெட் விமானங்கள் ஏற்றிக்கொண்டிருந்தன. இதை மறுக்க அமெரிக்கா விரும்பவில்லை.

★ தரைப்போர் தொடங்கப்படாவிட்டால் கூட்டணி நாடுகள் பலத்த அடிவாங்கும் என்று பாக்தாத் வானொலி கலைப்பு முடிவடைவதற்குச் சில மணி நேரத்திற்கு முன்பு அறிவித்தது.

★ வடசவூதி அரேபியாவில் தரைப்போர் தொடங்குவதற்கு சகல ஆயத்தங்களும் முடிவடைந்துள்ளதாகக் கூட்டுப்படைகள் அறிவித்துள்ளன.

★ கூட்டணிப் படைகள் ஈராக்கிய எல்லைக்குள் ஊடுருவி ஹெலிகொப்டர்களுக்கு எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றை நிறுவியுள்ளன.

★ பிரெஞ்சு அதிகாரிகள் தமது துருப்பினர் ஈராக் எல்லைக்குள் இருபது மைல்கள் வரையில் ஊடுருவிச்சென்று உளவறியும் வேலையில் ஈடுபட்டிருப்பதாகக் கூறியுள்ளனர்.

★ வாஷிங்டனில் வெள்ளை மாளிகை அதிகாரியொருவர் மாஸ்கோவின் அறிக்கை பற்றி கூட்டுப்படைகளுக்கு அக்கறை இல்லையெனக் கூறியுள்ளார். எங்கள் கூட்டணியின் அறிக்கைக்கு ஈராக்கின் பதில் என்ன என்பதே எமது கேள்வியாகுமெனக் கூறியுள்ளார்.

★ அமெரிக்காவின் காலக்கெடுவுக்கு எதிர்ப்பு ஆதரவு தெரிவித்துள்ளது. சோவியத்தின் மாற்றியமைக்கப்பட்ட திட்டமும் கூட ஐ.நாவின் தீர்மானங்களைப் பூர்த்தி செய்யவில்லை என்று எகிப்து கூறியுள்ளது.

★ குவைத்திலிருக்கும் 180 எண்ணெய்க் கிணறுகளுக்குத் தீமூட்டியிருப்பதாகவும், குவைத்திலிருக்கும் மக்களை ஆண், பெண், வயது வேறுபாடு எதுவுமின்றி ஈராக் துருப்புக்கள் கண்களையும் கைகளையும் கட்டி அழைத்துச் செல்வதாகவும் நடைபெற்று வரும் குவைத்திய அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ அமெரிக்க ஏவுகணை செலுத்தும் வாகனங்கள் குவைத்துக்குள் பலமான ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன. இந்த ஏவுகணை வாகனங்கள் ஒவ்வொன்றும் ஒரே தடவையில் 12 ஏவுகணைகளைத் தொடர்ச்சியாக ஏவக்கூடியவை.

## 1987 ஒப்பந்தத்தின் பின் இந்தியக் கொள்கை வேறு

(சென்னை)

-ப. சிதம்பரம்

1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதுடன் இலங்கைத் தமிழ் போராளிகள் குறித்து இந்திய மத்திய மாநில அரசுகள் மேற்கொண்டிருந்த கொள்கைகளில் பெரிய அளவு மாற்றமடைந்துவிட் ...

உல்பா தீவிரவாதிகளைப் பிடிப்பதற்குதவுமாறு கேட்டு அஸாம் காவல் துறையினர் தமிழக அரசு காவல்துறை இயக்குநருக்குக் கடிதங்கள் எழுதிய ...

